26th July 1957]

Re-employment in Government departments

* 271 *Q.*—Sri K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the names of persons re-employed, departmentwar during the year 1956–57; and

(*b*) the period of re-employment and the emoluments drawn by each?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The particulars are being collected.

Tripartite Study Team

* 272 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tripartite Study Team which visited European countries during 1956 has submitted any report to this Government with regard to conditions of workers in those countries; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No Tripartite Study Team was sent to the European countries in 1956 to study conditions of workers in those countries. A study team was, however, sent by the Government of India to European countries in October and November 1956 to study the workers participation in management. The team submitted its report to the Government of India.

(*b*) A copy of the report is placed in the library.

Sri M. KALYANASUNDRAM : இந்த கோஷ்டியார் மத்தியசர்க்காராலே அனுப்பப்பட்டதனாலே மத்திய சர்க்காருக்குத்தான் தங்கள் ரிப்போர்ட்டை சமர்ப்பித்திருக்கிறார். அவர்கள் செய்திருக்கக்கூடிய சிபார்சுகள் எவற்றை யாவது மத்திய சர்க்கார் நம் சர்க்காருக்கு அனுப்பிவைத்து அதன்பேரில் நம் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறார்களா ? அப்படி இருந்தால் அந்தச் சிபார்சுகள் என்ன ? அவற்றுக்கு நமது சர்க்கார் கொடுத்திருக்கும் அபிப் பிராயம் என்ன என்பதையும் சேர்த்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக் கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த அறிக்கையின் பேரில் ராஜ்ய மந்திரிகள் எல்லோரும் சேர்ந்த மகாநாட்டுக்கூட்டம் டெல்லியில் நடந்தது. இந்தியன் லேபர் கவுன்சில் கூட்டமும் சில வாரத்திற்கு முன்னால் டெல்லியில் நடந்தது. இந்த இரண்டு கூட்டங்களிலும் " **The workers participation in management** " என்பது பற்றி விரிவாக விசாரிக்கப்பட்டது. ஆகவே எந்த எந்த இடங்களில் அதைப் பரிட்சார்த்தமாக நடத்தக் கூடுமோ அங்கெல்லாம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அந்த முறையில் இங்கும்—கனம் அங்கத்தினர் இதுவரையில் ஊரில் இல்லாத காரணத்தால் சொல்கிறேன்—பரிட்சார்த்தமாக நிர்வாகத்தில் தொழிலாளர் களும் பங்குகொள்ள தனியார் துறையில் ஒரு கம்பெனியையும், சர்க்கார் துறையில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

Sri M. KALYANASUNDARAM : அந்த அறிக்கையின் பிரதிகள் லைப்ரரியில் போதுமான அளவில் வைக்கப்பட்டிருக்கிறதா ? இங்கு மொத்தம் 205 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் படிப்பதற்குப் போதுமான பிரதிகள் அவசியம் இருக்கவேண்டும், அவ்வாறு இருக்கிறதா ?